2003 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் மாநில செயல் திட்டம் கொண்டுவரப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் மாவட்டங்களை குழந்தைத் தொழிலாளர்கள் அற்ற மாவட்டங்களாக அறிவிக்க ஒரு வழிகாட்டும் வரைபடம்-road map-தயாரிக்கப்பட்டது. மடியில் மலர்ந்த மழலைப் பூக்கள் மண்ணிலே உதிர்ந்து மடிந்துவிடக்கூடாது, மகரந்தங்கள் சிதறும் மழலைகளின் புன்னகையில், பசியின் வேதனையும், பட்டினிக் கனவுகளும் பவனி வரக்கூடாது. கணுவில்லா கரும்புகளாய் தித்திக்கும் குழந்தைகள், கற்றாழைப் புதர்களாய் மாறிவிடக்கூடாது என்பதில் அன்னை மனம் கொண்ட எங்கள் அம்மாவின் அரசு உறுதியாக இருக்கிறது.

தமிழகத்தில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் தொழிலாளிகள் மற்றும் இலட்சக்கணக்கான அமைப்புசாராத் தொழிலாளிகளின் நலன்களைப் பேணுவதிலும், அத்தொழிலாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழகத்தில் தொழில் வளம் பெருக வேண்டும் என்பது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரிய, சீரிய கொள்கை என்பதோடல்லாமல், தொழில் வளம் பெருகுவதால், அதற்கு இணையாகத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பதில், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளித்திடவும் அவர்கள் உரிமைகளைப் பாதுகாத்திடவும், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருவதுடன், ஆய்வுகளின்போது கண்டறியப்படும் முரண்பாடுகளுக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-30

கடந்த ஆட்சியில் சட்டங்களை வைத்துக்கொண்டு ஏகப்பட்ட கொட்டங்களை அடித்தார்கள்! மக்கள் நலத் திட்டங்களை மறந்தார்கள்! பட்டங்களைப் பெறவும், பதவிகளைப் பெறவும்